**44**

# இது கூட்டப்படுவதாயிருப்பதில்லை!

## (13:18)

*கள்ளத்தீர்க்கதரிசி, "யாவரும் தங்கள் தங்கள் வலதுகைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும்படிக்கும், அந்த மிருகத்தின் முத்திரையையாவது அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக்கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவுங் கூடாதபடிக்கும் செய்தது" என்று யோவான் கூறினார் (13:16ஆ, 17). பின்பு அந்த அப்போஸ்தலர், "இதிலே ஞானம் விளங்கும்; அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுடையவன் கணக்குப்பார்க்கக்கடவன்; அது மனுஷனுடைய இலக்கமாயிருக்கிறது; அதினுடைய இலக்கம் <u>அறுநூற்றறுபத்தாறு</u>" என்றும் கூடுதலாகக் கூறினார் (வசனம் 18).*

*வில்லியம் பார்களே என்பவரின் கூற்றுப்படி, "வேதவாக்கியங்களின் வேறு எந்த வசனத்தைக் காட்டிலும் இந்த வசனத்தின்மீது அதிக சாதுரியம் செலவிடப்பட்டுள்ளது"[1] என்றுள்ளது. இராபர்ட் முல்ஹாலண்டு என்பவர், "இந்த எண் பற்றிய புதிருக்கு 666க்கும் அதிகமான தீர்வுகள் இருக்கலாமோ என்று ஒருவர் சந்தேகப்படுகின்றூர், அவற்றில் சில சாதுரியமானவைகளாக, மற்றவைகள் திறமையானவைகளாக மற்றும் பல நம்ப இயலாதவைகளாக உள்ளன"[2] என்று கூறினார்.*

*இந்த விஷயத்தை மேலும் குழப்புவதற்கு, சில கையெழுத்துப் பிரதிகளில் 616 என்ற மாறுபட்ட எண் காணப்படுகிறது: 666 அல்லது 616ன் முக்கியத்துவம் தான் என்ன? இந்த எடுத்துரைப்பில் நாம், இது பற்றி ஏற்படுத்தப்பட்டுள்ள கருத்துக்கள் சிலவற்றை ஆராய்ச்சி செய்து, இந்த எண்ணுக்கான, ஆரோக்கியமான, நியாயமான அர்த்தத்தை முன்மொழிவோம்.*

### வழக்கத்திற்கு மாறான சில விளக்கங்கள்

*வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்திற்கு, தொடர் வரலாற்று அணுகுமுறையைத்[3] தழுவியுள்ள விளக்கவுரையாளர்கள், இந்த எண்ணை ஒரு காலகட்டம் என்று ஏற்படுத்த முயற்சி செய்துள்ளனர்: இது மிகச் சரியாக 666 ஆண்டுகளைக் கொண்டு விரிந்துள்ள தனிச்சிறப்பான ஒரு*

*காலகட்டம் என்று அவர்கள் கூறுகின்றனர். இந்த இடைவெளி பற்றிய அவர்களின் விளக்கங்களில், புறதெய்வ வணக்கவியம், கத்தோலிக்கவியம், மொகம்மதியனியம் ஆகியவை உள்ளடங்கியிருக்கின்றன. இந்த நம்பிக்கைகள் ஒவ்வொன்றுமே 666 ஆண்டுகளுக்கும் மேலாக பற்றிக் கொள்ளப்பட்டுள்ளன என்ற உண்மையானது, இந்தக் கண்ணோட்டத் திற்கான மறுப்புகளில் ஒன்றாக உள்ளது.*[4]

*இந்த எண், "சாத்தானின் மேசியா"வைக் குறிக்கிறது என்பது வழக்கத்திற்கு மாறான ஒரு கருத்தாக உள்ளது. இந்த முடிவானது, "666" என்ற எண்ணைப் பின்வரும் வடிவத்தில் பயன்படுத்துவதால் பெறப்பட்டுள்ளது:*

χξς

*இந்த மூன்று அடையாளக்குறிகளில் முதலாவதானது, கிரேக்க எழுத்தான* "chi" *("ச்சை") என்பதாக உள்ளது, இது "600" என்று அர்த்தப்படக் கூடும். (இதை நான் இன்னும் ஒரு நிமிடத்தில் விளக்குவேன்) இரண்டாவது எழுத்தான* "xi" *("சை") என்பது "60"ஐக் குறிக்கக்கூடும். மூன்றாவது எழுத்தான* "sigma" *("சிக்மா") என்பது "6"ஐக் குறித்து நிற்கக்கூடும். இவ்விதமாக இந்தக் கிரேக்க எழுத்துக்கள் ஒன்று கூடி 666 என்ற மொத்த எண்ணைக் கொடுக்கின்றன. இந்தக் கற்பனையான அணுகுமுறையைப் பயன்படுத்துகின்றவர்கள், (*"chi"*) என்பது "கிறிஸ்து" என்பதற்கான கிரேக்க வார்த்தையின் முதல் எழுத்தாக உள்ளது, மற்றும் ("சிக்மா") என்பது அதே வார்த்தையின் கடைசி எழுத்தாக உள்ளது என்பதை சுட்டிக்காண்பிக்கின்றனர்.*[5] *இவ்விரண்டுகளுக்கும் இடையில் கோணலான பாம்பு போன்ற ஒன்று உள்ளது (என்று அவர்கள் கூறுகின்றனர்). ஆகையால், இந்த எண், கிறிஸ்துவை (மேசியாவை) வெளிப்புறத்திலும், சர்ப்பத்தை (பிசாசை) உட்புறத்திலும் சித்தரிக்கிறது என்று அவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்: இவ்விதமாக, இது சாத்தானின் மேசியா என்றாகிறது. இந்த கருத்தைத் தரைமட்டமாக்குவதற்கு ஏற்பட்டுள்ள பல பல மறுப்புகளில் பின்வருவதும் உள்ளது: கிரேக்க வசனத்தில் 666 என்பது (ச்சை - சை - சிக்மா)* χξς *என்று எழுதப்பட்டிருப்ப தில்லை, ஆனால் அதற்கு மாறாக* ἑξακοσιοι ἑξηκοντα ἑξ *(hexakosioi hexekonta hex - அறுநூற்று அறுபத்தாறு) என்று எழுதப்பட்டுள்ளது.*

## *பிரபலமான ஒரு அணுகுமுறை*

*666 என்பது யாரோ ஒரு தனிநபருடைய பெயரை அல்லது பட்டப்பெயரைக் குறிக்கிறது என்பது அதிகம் கருத்துள்ள - மற்றும், பல விளக்கவுரையாளர்களால் பரிந்துரைக்கப்படும் - கோட்பாடாக உள்ளது. இந்த அணுகுமுறையைப் பயன்படுத்துபவர்கள், "அதின் நாமத்தின் இலக்கத்தை" மற்றும் "அது மனுஷனுடைய இலக்கமாயிருக்கிறது" என்ற இரண்டு சொற்றொடர்கள் (13:17, 18), பரிசுத்த ஆவியானவர் ஒரு*

*குறிப்பிட்ட தனிநபரைத் தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்பதில் சந்தேகத்திற்கு இடம் வைப்பதில்லை என்று உறுதிப்படுத்துகின்றனர். (இவற்றில் இரண்டாவது சொற்றொடரில் திட்டவட்டமான சுட்டுச்சொல் இல்லாததால், அது "அது மனிதனின் [அல்லது மனித குலத்தின்] இலக்கமாய் இருக்கிறது" என்று மொழிபெயர்க்கப்பட முடியும்.[6])*

*இந்த அணுகுமுறையானது gematria என்று அழைக்கப்படுகிற பழங்கால எண்ணியல் பயன்பாட்டு முறையின் அடிப்படையில் அமைந்துள்ளது: "ஒரு வார்த்தையின் எழுத்துக்களின் பயனானது, அவற்றின் ஒன்றுகூட்டப்பட்ட எண்களின் மதிப்பானது ஒரு பெயரை அல்லது கருத்துக்களின் நகைச்சுவையான கோர்வையை அர்த்தப்படுத்தும் வகையில் பயன்படுகிறது."[7] யோவானின் நாட்களில், மக்கள் அரபி எண்களைப் (1, 2, 3 ...) பயன்படுத்தியதில்லை. ரோமர்கள் ரோம எண்களைப் பயன்படுத்திய வேளையில், கிரேக்கர்களும் எபிரெயர்களும் தங்கள் அகரவரிசை எழுத்துக்கள் ஒவ்வொன்றிற்கும் குறிப்பிட்ட ஒரு எண்மதிப்பைக் கொடுத்திருந்தனர். கிரேக்க அகரவரிசையில், "அல்பா" என்பது 1 என்ற எண்ணையும், "பீட்டா" என்பது 2 என்ற எண்ணையும், "காமா" என்பது 3 என்ற எண்ணையும், மற்றும் இதே போன்று பிற எழுத்துக்கள் பிற எண்களையும் குறித்து நிற்க முடிந்தது.[8] ஆங்கில மொழியில் இது எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பார்த்தால்,* "A" *என்பது 1 என்பதாகும்,* "B" *என்பது 2 என்பதற்கும்,* "C" *என்பது 3 என்பதற்கும் மற்றும் இதுபோல் பிற எழுத்துக்கள் பிற எண்களுக்கும் நிற்பது போன்றதாகும். இது அனேகமாக உங்களுக்கு வினோதமாகத் தோன்றலாம். ஆனால் நீங்கள் எப்போதாவது ரோம எண்களைப் பயன்படுத்தியிருந்தால்,[9] நீங்கள் ஏற்கனவே எழுத்துக்கள் எண்களைக் குறித்துநிற்கும் ஒரு முறைமைக்கும் பழக்கமாகியிருக்கின்றீர்கள்:* "I" *என்பது 1க்குச் சமமாகிறது,* "V" *என்பது 5க்கும்,* "X" *என்பது பத்துக்கும் சமமாகிறது, மற்றும் இதுபோல் பிற எழுத்துக்களும் பிற எண்களுக்குச் சமமாகிறது.*

*Gematria என்ற முறைமையைப் பயன்படுத்தி,* Sibylline Oracles[10]*என்ற புத்தகமானது, "இயேசு" என்பதற்கான கிரேக்க வார்த்தையானது 888க்குச் சமம் என்பதைச் செயல்விளக்கப்படுத்திற்று:*

| | | |
|---|---|---|
| I ("iota") | = | 10 |
| η ("eta") | = | 8 |
| σ ("sigma") | = | 200 |
| ν ("omicron") | = | 70 |
| υ ("upsilon") | = | 400 |
| σ ("sigma"[11]) | = | 200 |
| Total | = | 888 |

*கிரேக்கர்கள் gematriaவை ஒரு விளையாட்டு என்ற வகையில் முதன்மையாக பயன்படுத்தினர். ஒரு விளையாட்டாளர் ஒரு பெயரை எண்ணாகத் திருப்பி,[12] அந்த எண்ணை விளையாடும் மற்றவர்களுக்கு*

கொடுப்பார், பின்பு அந்த பெயர் என்ன என்று கண்டுபிடிக்குமாறு அவர்களுக்கு அறைகூவல் விடுப்பார். உதாரணமாக, மேலே குறிப்பிடப்பட்ட A-B-C முறைமையைப் பயன்படுத்தினால், David என்ற பெயரானது *40* என்ற மொத்த எண்ணைப் பெறும் (D = 4, A = 1, V = 22, I = 9, D = 4). விளையாடுபவர் ஒருவருக்கு *"40"* என்ற எண் தரப்பட்டு, தொடக்கப் பெயரைக் கண்டுபிடிக்கும்படி அறைகூவல் விடப்படும்.

ஒரு பெயரை எண்ணுகத் திருப்புதல் ("David = 40" போன்றது) என்பது சுலபமாய் இருக்கையில், விளைந்த எண் ஒன்றைத் தொடக்கப் பெயராகத் திருப்புதல் என்பது கடினமாக உள்ளது. A-B-C ஏற்பாட்டைப் பயன்படுத்தினால் "Linda" (12 + 9 + 14 + 4 + 1) என்பதும் *40*க்கும் சமமாகவே உள்ளது, இதுபோல் பல பெயர்களும் இதே கூட்டுத்தொகை கொண்டிருக்கும். முன்மொழியப்படும் எந்த ஒரு எண்ணும், கணக்கற்ற "சரியான விடைகளை" கொண்டிருக்கக் கூடும் என்பதால், புதிரைப் போட்டவர் இது "சரியானவிடை" என்று கூறும்போது மாத்திரமே, பங்கேற்றவர் தாம் வெற்றி பெற்றதை அறியமுடியும் என்பதுதான் ஒரே வழியாக இருந்தது. இந்த விளையாட்டை நாம் விளையாட விரும்பினால், (யோவான்) அப்போஸ்தலர் தமது சிந்தையில் கொண்டிருந்த பெயர் என்ன என்பதை நாம் அறிவது என்பது, உண்மையில் அவர் "சரியான பதிலுக்குப் பக்கம் *60*ஐக் காணவும்" என்பது போன்ற குறிப்பைக் கூட்டியிருந்தால் மாத்திரமே சாத்தியமாய் இருக்கும்.

இருந்தபோதிலும், யோவான் *gematria*வைப் பயன்படுத்தினார் - அதாவது, அவர் தமது வாசகர்களுக்கு ஒரு புதிரை முன்மொழிந்தார் - என்று பல விளக்கவுரையாளர்கள் நம்புகின்றனர். இதன்படியாக, பல பக்கங்களுக்கு நான் இந்தக் கருத்துடனும் எண் விளையாட்டுடனும் செல்லவிருக்கின்றேன். நான் இதை முடிப்பதற்கு முன்பு, பவுலைப்போல், "நான் அதிகம், புத்தியீனமாய்ப் பேசுகிறேன்" என்பதாகத் தோன்றலாம் (2 கொரிந்தியர் *11:23*). எனது மதியீனத்தை என்னுடன் பொறுத்துக் கொள்ளும்படி வேண்டுகின்றேன்; நான் ஒரு மும்முரமான நோக்கம் கொண்டுள்ளேன்.

வெளிப்படுத்தின விசேஷம் *13:18* உடன் தொடர்புடைய வகையில் *gematria*வின் முதல் பதிவேடு ஒன்றை நாம் கி.பி. *185*ம் ஆண்டளவில் எழுதப்பட்ட, இரேணியுஸ்[13] என்பவரின் எழுத்துக்களில் கொண்டுள்ளோம். இரேணியுஸ் என்பவர் *666* என்று கூட்டப்படுகின்றதான மூன்று பெயர்களை அல்லது பட்டப்பெயர்களைக் குறிப்பிட்டார். அவற்றில் ஒன்று நமக்கு இனியும் ஏதொன்றையும் அர்த்தப்படுத்தாத ஒரு கிரேக்க வார்த்தையாக உள்ளது: இது *Euanthas* என்பதாகும். ஒருவேளை இது, அவரது நாட்களில் நன்கு அறியப்பட்டிருந்த ஒருவருடைய பெயராக இருந்திருக்கலாம். இன்னொன்று, *Lateinos* என்ற கிரேக்கச் சொற்றொடராகும், இது "Latin man" ("இலத்தீன் மனிதன்") அல்லது "Latin thing" ("இலத்தீன் விஷயம்/பொருள்") என்று அர்த்தப்படக் கூடும். சில வேளைகளில் இது, "Latin kingdom" ("இலத்தீன் இராஜ்யம்") அல்லது "Latin empire" ("இலத்தீன் பேரரசு") என்று அர்த்தப்படும்படி விளக்கப்படுகிறது).[14] (எனது விளக்கத்தை இவ்விடத்தில் இருந்து எளிமைப்

*படுத்துவதற்காக நான் கிரேக்க மற்றும் எபிரெய எழுத்துக்களுக்குச் சமமான ஆங்கில எழுத்துக்களைக் கொடுப்பேன்.) அவரது மூன்றுவது உதாரணம் Teitan என்பதாக இருந்தது (இது ரோமப்பேரரசர்களில் ஒருவரான* "Titus" *என்பவருடைய பெயரின் மாற்று எழுத்து உச்சரிப்பாக இருந்திருக்கலாம்).*[15] *இரேணியுஸ் என்பவர் இம்மூன்றில் எது என்பதை முடிவு செய்ய மறுத்து, "எழுத்தாளர் அந்தப் பெயரை நாம் அறிய வேண்டும் என்று விரும்பியிருந்தால், அவர் அதை முழுமையாக எழுதியிருப்பார்" என்று கூறினார்.*[16]

*மற்ற சாத்தியக்கூறுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன, ஆனால் சமீபத்திய ஆண்டுகளில், இந்த "குறிப்பறியும் கலை"க்கு மிகப் பிரபலமாயிருந்தது, புகழ்ச்சியற்ற நீரோ என்பவனேயாவான். 666 என்பது நீரோவைக் குறிப்பிடுகிறது என்று ஒருசிலருக்கும் அதிகமான விளக் கவுரையாளர்கள் வகைப்படுத்திக் கூறுகின்றனர். நீரோ என்ற பெயரை 666க்குச் சமமாக்குவதற்கு, அவனது "செசார்" என்ற பட்டப்பெயரையும் சேர்த்துக்கொள்வது, அவனது பெயரில் மாறுபாடு ஒன்றைப் பயன்படுத் துவது, மற்றும் அதன் பின்பு அவனது பெயரையும் பட்டப்பெயரையும் எபிரேய மொழிக்கு மாற்றுவது ஆகியவை அவசியமாகின்றன. விளைவு பின்வருமாறு:*

| | | |
|---|---|---|
| N ("nun") | = | 50 |
| e | = | 0[17] |
| r ("resh") | = | 200 |
| o ("waw") | = | 6 |
| n ("nun") | = | 50 |
| | | |
| K ("kaph") | = | 100 |
| a | = | 0 |
| i | = | 0 |
| s ("samekh") | = | 60 |
| e | = | 0 |
| r ("resh") | = | 200 |
| Total | = | 666 |

*இந்த கண்ணோட்டத்தைப் பற்றிக்கொண்டிருப்பவர்கள்,* "Neron," *என்ற பெயரில் உள்ள கடைசி* "n" ("nun") *நீக்கப்படும்போது, இந்த எழுத்துக்களின் எண்கள் கூட்டப்பட்டு வரும் தொகையானது 616 என்றாகி விடுகிறது, இது வசனப்பகுதியின் மாற்று வாசிப்பாகும் என்பதுதான் பிடிப்பாக உள்ளது என்று நம்புகின்றனர். "666 மற்றும் 616 ஆகிய இரண்டு கூட்டுத்தொகையும் வருவதுபோன்று உள்ள பெயர் வேறு ஏதாவது உள்ளதா?" என்று அவர்கள் கேட்கும்போது, அவர்களின் வார்த்தைகளில் நீங்கள் ஆச்சரியத்தை உணரமுடியும்.*

*666 (அல்லது 616) என்ற எண், நீரோவின் எண்ணாக/பெயராக உள்ளது என்று நம்புபவர்களிடத்தில் சண்டையிடும் விருப்பம் எதுவும் எனக்கு*

இல்லை. அந்த முடிவானது வசனப்பகுதிக்குப் பாதகம் எதையும் விளைவிப்பதில்லை, அது மற்ற வசனப்பகுதிகளுக்கு முரண்படுவதும் இல்லை, மற்றும் அது சந்தர்ப்பப்பொருளுடன் நன்கு பொருந்துகிறது.[18] இருந்தபோதிலும், முழுமையான வகையில் இந்த அணுகுமுறை பற்றி நான் கொண்டுள்ள ஐயப்பாடுகளுடன் கூடுதலாக, இந்தக் கண்டறிதலில் நான், குறிப்பிட்ட சில பிரச்சனைகளைக் கொண்டுள்ளேன்: (1) வார்த்தைகளின் எழுத்துக்களை மாற்றுவது, பட்டப்பெயர்களைக் கூட்டுவது, அல்லது மற்ற மாறுதல்களைச் செய்வது அவசியமாயிருக்க வேண்டியது ஏன்? (2) கிரேக்க மொழிக்குப் பதிலாக எபிரெய மொழியைப் பயன்படுத்த வேண்டியது ஏன்?[19] G. B. கேயர்டு என்பவர், "யோவான் கிரேக்க மொழியில் எழுதினார், அவர் தமது வாசகர்களிடத்தில் எபிரெய மொழியின் அகர வரிசையை வாசிக்கும் அறிவைக்கூட எண்ணிப் பார்த்திருக்க இயலாது'' என்று கூறினார்.[20] (3) மிகவும் குறிப்பிடத்தக்க வகையில், சில கல்வியாளர்கள் நினைப்பதுபோல், இந்த விளக்கம் தெளிவாக உள்ளதென்றால், இந்தத் தீர்வை வெளிப்படுத்தின விசேஷத்தின் பழங்கால விளக்கவுரையாளர்கள் எவரும் உணர்ந்து அறியாதிருந்தது ஏன்? "உதாரணமாக, இரேணியுஸ் ... 666 என்பது எதை அர்த்தப்படுத்துகிறது என்பதற்குப் பல கண்ணோட்டங்களை முன்வைத்தார், ஆனால் அவர் குறிப்பிட்ட அந்த சாத்தியக்கூறுகளின் மத்தியில், நீரோவின் பெயரை உள்ளடக்கவில்லை, அவரை சாதகமான வேட்பாளராக இவர் (இரேணியுஸ்) காணவும் இல்லை."[21]

"இந்த புதிருக்கு" பிற "தீர்வுகளும்" இருந்துள்ளன: ஒரு எழுத்தாளர் ஜூலியஸ் செசாரில் இருந்து வெஸ்பாஸியன் செசார் வரையிலும் ஆட்சிசெய்த செசார்களின் (கிரேக்கப்) பெயர்களில் உள்ள முதல் எழுத்துக்கள் யாவற்றிற்கும் உரிய எண்களை எழுதி அவற்றின் கூட்டுத் தொகை 666 என்று வருவதைக் கண்டுபிடித்தார்.[22] இன்னொருவர், டொமீஷியன் வெளியிட்ட அவனது காலத்தின் நாணயங்களில் இருந்த இராஜரீகப் பட்டப்பெயரின் எண் மதிப்பை யோவான் கணக்கிட்டதாக வலியுறுத்தினார்.[23]

விசுவாச விலக்கத்தை முன்னுரைத்தல் என்பதே வெளிப்படுத்தின விசேஷத்தின் பிரதான நோக்கமாக உள்ளது என்று நம்புகின்றவர்கள், ரோமாபுரியின் போப்பைச் சுட்டிக்காண்பிக்கும் தீர்வுகளுக்குச் சாய்ந்துள்ளனர்.[24] குறிப்பாக *vicarius filii dei* ("தேவனுடைய குமாரனுடைய இடத்தில்") என்ற சொல்விளக்கம் கற்களினால் ஆன எழுத்துக்களாகப் பதிக்கப்பட்ட போப்பின் கிரீடமானது அவரது பட்டம் சூட்டும் வைபவத்தில் பயன்படுத்தப்படுகிறது. இந்தச் சொற்றொடரில் உள்ள எழுத்துக்களை ரோம இலக்கங்களாக்குகையில், அவைகளின் மொத்தம் 666 என்றாகிறது.[25]

1837ல் அலெக்ஸாண்டர் கேம்பெல் என்பவர், ஜான் B. பெர்செல் என்ற கத்தோலிக்க ஆயருடன் வாதம் செய்தபோது, "the Latin Kingdom"[26] என்பது கிரேக்க மொழியில் 666 என்ற கூட்டுத்தொகையாக வருவதைக் கேம்ப்பெல் காண்பித்தார், இது கத்தோலிக்க சபையையே குறிக்கமுடியும் என்றும் அவர்

வலியுறுத்தினார்.[27] பெர்செல், தமது கற்பனைத் திறன் மற்றும் உருவாக்கத்திறன் ஆகியவற்றில் இருந்த குறைபாட்டினால், தக்கதொரு மாற்றுக் கருத்தைக் கொண்டுவரத் தவறிவிட்டார்.[28]

சற்றே சாதுரியத்துடன், இந்த எண்ணானது ஏறக்குறைய எவரொருவருக்கும் அல்லது எந்த ஒரு விஷயத்திற்கும் பொருத்தமாக்கப்பட முடியும் என்ற மனப்பதிவை நீங்கள் இந்நேரம் பெற்றிருப்பீர்கள்.[29]

பெயர்கள் 666க்குச் சமமாய் இருக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்ட, உண்மையான அல்லது யூகிக்கப்பட்ட வில்லன்களின் பெயர்ப்பட்டியல் முடிவற்றதாக உள்ளது. இங்கு ஒரு சிறு பட்டியல் தரப்படுகிறது: பிளேட்டோ, பெரும்பாலான பேரரசர்கள் (இவர்களில், கிறிஸ்தவர்களின் உபத்திரவங்களுக்கு பொறுப்பானவர்கள்மீது விசேஷித்த வலுயுறுத்தம் செலுத்தப்பட்டது), போப் ஒவ்வொருவரும், பல்வேறு ஆயர்கள் மற்றும் உயர் ஆயர்கள், மொகம்மது மற்றும் பல முஸ்லீம் தலைவர்கள், புரொட்டஸ்டன்டு சீர்திருத்தவாதிகளில் பெரும்பான்மையானவர்கள்,[30] நெப்போலியன் போனபார்ட், ஆலிவர் கிராம்வெல், ஹிடேக்கி டோஜோ மற்றும் பெனிட்டோ முசோலினி (ஹிட்லருடன் கூடுதலாக), ஜோசப் ஸ்டாலின், கார்ல் மார்க்ஸ், ரொனால்டு ரீகன், மற்றும் ஹென்றி கிஸ்ஸிங்கர்.[31] மக்களுடன் கூடுதலாகச் சிலர், இந்த எண்ணானது ஐரோப்பியப் பொது சந்தை, பெல்ஜியத்தில் உள்ள மாபெரும் கணணி அல்லது மற்ற சில கற்பனையான அச்சுறுத்தல் என்பவற்றைக் குறிப்பதாகவும் நம்புகின்றனர்.

வில்லியம் ஹென்ரிக்ஸென் என்பவர், "ஒரு பெயரில் உள்ள எண் மதிப்புகளைக் கூட்டுவதினால் ஒரு விளக்கத்தைப் பெறச் செய்யப்படும் முயற்சிகள், எல்லாவற்றிற்கும் வழிநடத்துவதால், அவைகள் ஒன்றிற்கும் வழிநடத்துவதில்லை என்றே கூறலாம்" என்று சரியாகவே எழுதினார்.[32] ஆலன் ஜான்ஸன் என்பவர் பின்வருமாறு எழுதினார்,

> Gematria முறையினால் ஆண்டுகளினூடே உண்டாக்கப்பட்ட முழுமையான கருத்து வேறுபாடும் குழப்பமும், சபையானது தவறான பாதையில் இருந்தது என்பதை நீண்ட காலத்திற்கு முன்பாகவே எச்சரித்து இருந்திருக்க வேண்டும் ... . மிருகத்தின் வஞ்சனையை ஆழமாக ஊடுருவிக் காணவும், மிருகம், அதனை பின்பற்றுபவர்கள் மற்றும் ஆட்டுக்குட்டி, அவரைப் பின்பற்றுபவர்கள் ஆகியோருக்கு இடையில் வேறுபாட்டைக் காணவும் கூடுமளவுக்கு விசுவாசிகளுக்கு ஒளியூட்டுதலை யோவான் நாடியிருந்தார் என்றுல் (14:1), அவர் தெளிவாகவே தவறியிருக்கின்றார் - அதாவது, நாம் gematria விளையாட்டை விளையாட வேண்டும் என்று அவர் நோக்கம் கொண்டிருந்தால்.[33]

## சீர்பொருத்தமான அணுகுமுறை

*International Standard Bible Encyclopedia* என்ற புத்தகத்தில் *gematria* என்பதைப் பற்றிய கலந்துரையாடலில், வில்லியம் ஸ்மித் என்பவர்,

*"வேதவசனங்களில் ஒரே ஒரு தெளிவான உதாரணம் மாத்திரம் உள்ளது, மிருகத்தின் இலக்கம் என்பது மனிதனின் இலக்கமாக உள்ளது, அது அறுநூற்று அறுபத்தாறு என்பதாகும் [வெளிப்படுத்தின விசேஷம் 13:18 ]" என்று எழுதினார்.[34] இது (ஸ்மித் உரிமை கோரியபடி), பலர் நம்புகின்ற விஷயமான, 13:18க்கு முன்னர், வெளிப்படுத்தின விசேஷத்தின் எல்லா இலக்கங்களும் அடையாளத்துவமாய் விளக்கப்பட வேண்டியுள்ளன, மற்றும் 13:18க்குப் பின்பும் எல்லா இலக்கங்களும் அடையாளத்துவமாய் விளக்கப்பட வேண்டியுள்ளன, ஆனால் இந்த ஒரு வசனத்தில் மாத்திரம் ஆவியானவர் gematria விளையாட்டை விளையாட முடிவுசெய்தார் என்பது வினோதமானது என்ற வகையில் உங்களைத் தாக்குகிறதா? பால்டிங்கர் என்பவர், "இறைவெளிப்பாட்டில் வேறு எவ்விடத்திலும் அதன் எழுத்தாளர், இவ்விதமான கணக்கியல் செயல்முறை எதினாலும் அர்த்தம் கண்டறியப்பட வேண்டிய இலக்கம் ஒன்றைப் பயன்படுத்தவில்லை; வேறு எல்லா இடங்களிலும் எண்கள் அடையாளத்துவமாகவே எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன"[35] என்று சுட்டிக்காண்பித்தார். தெளிவான கேள்வி பின்வருமாறு: சீர்பொருத்தமாக இருப்பதற்கு, "666" என்ற எண்ணும் அடையாளத்துவமாக எடுத்துக்கொள்ளப்படக்கூடாதா?*

*"666" என்பதன் அடையாளத்துவ அர்த்தம் என்ன? இதைப் பற்றி நாம் முந்திய பாடத்தில் பேசினோம், ஆனுல் ஒரு மறுகண்ணோட்டம் அவசியமாக உள்ளது: ஆறு என்பது ஏழில் ஒன்று குறைவானது என்பதால், ஆறு என்பது பூரணமற்ற தன்மை அல்லது தீமை என்பதைக் குறிக்கிறது என்று நாம் வலியுறுத்தியிருந்தோம் ''ஆறு'' என்பதற்கான கிரேக்க வார்த்தையாகிய hex என்பது, "ஒரு தீயசொல், ஒரு சாபம்" என்று அர்த்தமாக வந்துள்ளது. யூதர்கள் பலருக்கு, "ஆறு" என்பது, இன்றைய நாட்களில் (அமெரிக்காவில்) பலருக்கு "பதிமூன்று" என்பது (தமிழகத்தில் 8 என்பது துரதிர்ஷ்டமான எண்ணாகக் கருதப்படுகிறது) கொண்டுள்ள அதே அர்த்தத்தையே கொண்டிருந்தது. மீண்டுமாக, ஆறு என்பது ஏறக்குறைய ஏழு என்பதாக உள்ளதால், ''ஆறு'' என்று கூறுவது, வஞ்சனையை மறைமுகமாய் உணர்த்திற்று. நிறைவாக, ''ஆறு'' என்பது அழிவை முன்னறிவித்தது, இந்தக் கருத்துக்கள் யாவையும் "ஆறு" என்ற எண்ணின் அடையாளத்துவ முக்கியத்துவத்தில் பொதியப்பட்டிருந்தன.*

*அந்தக் கருத்துக்களேத் திரும்பக்கூறுவதை வலுப்படுத்திஞல், நாம் "666" என்ற எண்ணை வந்து சேருகின்றோம். முல்ஹாலண்ட் என்பவர், "தரிசனத்தில் மூன்று மும்மைகள் உள்ளன: பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் (4:8); ஐயோ, ஐயோ, ஐயோ (8:13); மற்றும் ஆறு ஆறு ஆறு (13:18) ... . ஆகையால் மிருகத்தின் இயல்பானது 'பூரணமான' (மும்மடங்கு) பூரணமற்ற தன்மை (ஆறுகள்)"[36] என்று கவனித்தார். பால்டிங்கர் இதைப் பின்வருமாறு இரத்தினச் சுருக்கமாகக் கூறினார்: "ஆறு! ஆறு! ஆறு! இது பயங்கரம் நிறைந்த வீழ்ச்சியின் பரம அறிவிப்புப் போன்று வீழ்கிறது."[37]*

## முடிவுரை

*இவை எல்லாம் தொடக்ககாலக் கிறிஸ்தவர்களுக்கு எதை அர்த்தப் படுத்திற்று? ரோமப்பேரரசு பயமுறுத்துவதாக இருந்தது போலவே, பேரரச வணக்கத்தை அமுல்படுத்திய அலுவலர்கள், தோல்விக்கான அழிந்து போகும் முறைமையொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாய் இருந்தனர். இதே நடைமுறைப் பயன்பாட்டை இன்றைய நாட்களிலும் ஏற்படுத்த முடியும்: கர்த்தரை எதிர்த்து நிற்கும் எவரொருவரும் எந்த விஷயமும் கடைசியில் தோல்வியடையும். தேவன் அதை ஒருமுறையல்ல ஆனல் மூன்று முறைகள் உத்தரவாதப்படுத்தியுள்ளார்! இவ்விதமாக, ஹோமர் ஹெய்லீ என்பவர் பின்வருமாறு எழுதினார்,*

> *... ஆறு - ஆறு - ஆறு என்ற மிருகத்தின் எண்ணானது, தேவனுக்கும் அவருடைய கிறிஸ்துவுக்கும் எதிர்த்து நிற்கும் மனித முறைமைகள் மற்றும் முயற்சிகள் யாவற்றின் முழுமையான மற்றும் முற்றான தோல்வியைக் குறித்து நிற்கிறது - இவையாவும் நிறைவில் அழிந்து முழுமையான தோல்வியையும் வீழ்ச்சியையும் அடையும். இந்த விளக்கமானது வெளிப்படுத்தின விசேஷத்தின் ஆய்வுக்கருத்து மற்றும் நோக்கத்திற்கு இசைவாக உள்ளது.*[38]

*இங்கே ஆறுதல் உள்ளது; இங்கே பலம் உள்ளது; "இதிலே ஞானம் விளங்கும்" (13:18அ).*

---

## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

*ஆல்பர்ட் பால்டிங்கர் என்பவர் வெளிப்படுத்தின விசேஷம் 13:18ன் மீதான தமது பாடத்தை "வெளிப்படுத்தின விசேஷத்தின் கணக்கு" என்று அழைத்தார்.*

---

குறிப்புகள்

[1]William Barclay, *The Revelation of John,* vol. 2, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1976), 100. [2]M. Robert Mulholland Jr., *Revelation: Holy Living in an Unholy World,* Francis Asbury Press Commentary, gen. ed. M. Robert Mulholland Jr. (Grand Rapids, Mich.: Francis Asbury Press, 1990), 238. [3]*வெளிப்படுத்தின விசேஷத்திற்குத் தொடர் வரலாற்று அணுகுமுறை பற்றி உங்கள் நினைவைப் புதுப்பித்துக் கொள்வதற்கு "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் உள்ள "நன்கு தொடங்கப்பட்டது பாதி முடிந்ததாக உள்ளது" என்ற பாடத்தைக் காணவும்.* [4]*இந்த அணுகுமுறை பற்றிய மற்ற மறுப்புகளுக்கு முந்திய அடிக்குறிப்பில் குறிப்பிடப்பட்ட பாடத்தைக் காணவும்.* [5]*இந்தக் கண்ணோட்டத்தைப் பற்றிக்கொண்டுள்ள மற்றவர்கள்* "sigma" *என்பது "இரட்சகர்" என்பதற்கான கிரேக்க வார்த்தையின் முதல் எழுத்தைக் குறித்து நிற்கிறது என்று நம்புகின்றனர்.* [6]*இந்தப்*

புத்தகத்தில் உள்ள "மகா வஞ்சனையாளன்" என்ற பாடத்தில் 13:18ன் மீதான விளக்கங்களைக் காணவும். [7]William Taylor Smith, "Number," in *The International Standard Bible Encyclopedia*, ed. James Orr (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1960), 4:2162. [8]அடிப்படையில், "alpha" முதல் "iota" வரையுள்ள எழுத்துக்கள் 1 முதல் 10 வரையுள்ள எண்களைக் குறித்து நின்றன, பின்பு "kappa" என்பது 20 ஆக, "lambda" என்பது 30 ஆக, "mu" என்பது 40 ஆக, இதுபோல் மற்ற எழுத்துக்களுக்கும் எண்கள் தரப்பட்டிருந்தது. "Rho" என்பது 100 ஆக "sigma" (ஒரு வார்த்தையின் மத்தியில் உள்ள "s" போன்ற வடிவம் கொண்டது) என்பது 200 ஆக, "tau" என்பது 300 ஆக மற்றும் இதுபோல் மற்ற எழுத்துக்களுக்கும் எண்கள் தரப்பட்டிருந்தது. வார்த்தைகளின் முடிவில் பயன்படுத்தப்பட்ட "sigma" என்பதின் வடிவம் 6 என்பதற்கும் 90 மற்றும் 900 என்பவற்றைக் குறிக்கும் விசேஷித்த அடையாளங்களுக்கும் பயன்படுத்தப்பட்டது என்பது, இந்த ஏற்பாட்டிற்கு விதிவிலக்காக இருந்தது. [9]இன்றைய நாட்களிலும்கூட, தேதிகள் அவ்வப்போது ரோம இலக்கங்களில் எழுதப்படுகின்றன, மற்றும் சில கடியாரங்களில் ரோம இலக்கங்கள் பயன்படுத்தப்படுகின்றன. [10]The Sibylline Oracles என்பவை (ஏவுதல் பெற்றிராத) இறைவெளிப்பாட்டு எழுத்துக்களின் தொகுப்பாக உள்ளது. இது, பழங்காலக் கிரேக்க கடவுள் வாக்கு உரைப்பவர்களின் வரையறைக்குள் ரோமப்பேரரசு இருந்தபோது எழுதப்பட்டது.

[11]σ என்பது ஒரு வார்த்தையின் முடிவில் எழுதப்பட்ட "sigma" என்பதன் வடிவமாக இருந்தாலும் Sibylline Oraclesல், மத்தியில் பயன்படுத்தப்படும் "sigma"வே இங்கு எதேச்சையாக திரும்பவும் எழுதப்பட்டது. இங்கு பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டிய s என்பது "6"க்குச் சமமானதாயிருக்கும். [12]பாம்ப்பீ நகரத்துச் சிதிலங்களில் இருந்த சுவர் எழுத்துக்களில் உள்ள, "545ம் எண் கொண்டவளை நான் நேசிக்கின்றேன்" என்பது பல விளக்கவுரையாளர்களால் சுட்டிக்காண்பிக்கப்படும் உதாரணமாக உள்ளது. இவ்விதமாக இதை எழுதியர், ஒரு குறிப்பிட்ட பெண் மீதான தமது அன்பை வெளிப்படுத்தினார், அதே வேளையில் அவளது பெயரை, அவள் யாரென்று அறியாதவர்களிடத்தில் இருந்து மறைத்தார். [13]போலிகார்ப் என்பவரின் சீடரான இரேணியுஸ் (கி.பி. 140-202) என்பவர், சிமிர்னாவில் இருந்த சபையின் நடத்துநர்களில் ஒருவராக இருந்தார். போலிகார்ப் மற்றும் சிமிர்னாவில் இருந்த சபை பற்றிய தகவல்களுக்கு, "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் உள்ள, "செல்வத்துடன் இருந்த ஏழை சபை" என்ற பாடத்தில் காணவும். "666"ஐப் பற்றிய இரேணியுஸ் குறிப்புகள், *Against Heresies* (5.30.3) என்ற அவரது புத்தகத்தில் உள்ள *Against Heresies* என்பது அறிவுசார் குழுமத்தைச் சேர்ந்த பிரிவுகளுக்கு (தேவனைப் பற்றிய) விளக்கமாக, பதிலாக உள்ளது. அறிவுசார் குழுமம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றை "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "இருதயக்கோளாருடன் இருந்த சபை" என்ற பாடத்தில் காணவும், விசேஷமாக அப்பாடத்திற்கான அடிக்குறிப்புகளை மறுகண்ணோட்டமிடவும். [14]ரோமர்கள் இலத்தீன் மொழியைப் பேசியதால், இது ரோமப்பேரரசை அர்த்தப்படுத்துவதாக சிலர் எடுத்துக்கொள்கின்றனர், மற்றவர்கள் இதை ரோமப் பேரரசனுக்கு மாறாக, இலத்தீயம் என்ற நாட்டின் தொடக்கால அரசனைக் குறிப்பிடுவதாக எடுத்துக் கொள்கின்றனர். சிலர் இதை, இரேணியுஸுக்குக் கிடைத்திருக்கக்கூடாத அர்த்தமான, கத்தோலிக்கம் என்பதற்கு நடைமுறைப்படுத்துகின்றனர். [15]தீத்துவைப் பற்றிய தகவல்களுக்கு, "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் காணப்படும் "குறிப்பிடத்தக்க குறிகளும் திகைப்பூட்டும் அடையாளங்களும்" என்ற பாடத்தில் காணவும். தீத்து தானே யூதர்களைத் துன்புறுத்தினான், ஆனால் அவனது சகோதரனான டொமீஷியன் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினான். "தீத்து" என்பது

குடும்பப் பெயராக இருக்கலாம் என்று சிலர் நினைக்கின்றனர். [16]Quoted in Henry B. Swete, *The Apocalypse of St. John* (Cambridge: MacMillan Co., 1908; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., n.d.), 175. [17]எபிரெய அகரவரிசை. உயிரெழுத்துக்களைக் கொண்டிருப்பது இல்லை. இவ்விதமாக, உயிரெழுத்துக்களில் பெரும்பான்மையானவை பூஜ்யத்திற்குச் சமமானதைக் குறிப்பதாக இருக்கும். "0" என்பது, 6க்குச் சமமான "waw" என்பதற்கு மேல் ஒரு அடையாளக்குறியை வைத்து உண்டாக்கப்படுவதால், விதிவிலக்கானதாக உள்ளது. இந்த விளக்கமானது, முதல் மிருகம், "உயிர்ப்பிக்கப்பட்ட நீரோ" - அதாவது டொமீஷியன் - என்ற கருத்துடன் பிணைவுபட முடியும். [19]ரோமர்கள் கிரேக்க மொழியை அறிந்திருந்தும், எபிரெய மொழியை அறிந்திராதபடியால், எபிரெய மொழியின் பயன்பாடானது, அர்த்தத்தைக் கண்டுணர்வதை ரோமர்களுக்குக் கடினமாக்கியிருக்கும் என்பதைச் சுட்டிக்காண்பித்துச் சிலர் இந்தக் கோள்விக்குப் பதில் அளிக்கின்றனர். [20]G. B. Caird, *A Commentary on the Revelation of St. John the Divine* (New York: Harper & Row, 1966), 175.

[21]Leon Morris, *Revelation,* rev. ed., The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 38-39. [22]இந்த எழுத்தாளர் இதை, கல்பாவை உள்ளடக்கியதால், ஆனுல் ஒத்தோ மற்றும் விட்டேலியஸ் ஆகியோரை விலக்கி வைத்ததினால் நிறைவேற்றினார் - ஏனெனில் இந்தப் பட்டியலை "பொருத்தமுடையதாக்க" இதை தவிர வேறு உறுதியான காரணம் எதுவும் இல்லை. ரோமப் பேரரசர்களின் பட்டியலை "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் காணப்படும் "குறிப்பிடத்தக்க குறிகளும் திகைப்பூட்டும் அடையாளங்களும்" என்ற பாடத்தில் காணவும். [23]இந்த எழுத்தாளர் இதை, டொமீஷியனின் முழு பட்டப்பெயரையும் எடுத்து, அதைக் கிரேக்க மொழியில் மாற்றம் செய்ததன் மூலமும், பின்பு ஐந்து வார்த்தைகளையும் சுருக்கினார் - இதை அவர், பட்டப்பெயரின் இவ்விதமான வடிவமானது எந்த ஒரு தனி நாணயத்திலும் காணப்படவில்லை என்பது உண்மையாய் இருந்தபோதிலும் செய்தார். [24]இவர்கள், "The Latin Man" போன்ற சொற்றொடர்களை, போப்பின் அதிகாரம் பற்றிய தீர்க்கதரிசனமாக எடுத்துக்கொண்டுள்ளனர். [25]ரோம இலக்கங்களுக்குச் சமமான எழுத்துக்கள் இல்லாதவைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன, மற்றும் u என்பது v என்று கையாளப்பட்டுள்ளது. *Theos eimi epi gaies* ("நான் பூமியின் மீது தேவனாக இருக்கின்றேன்") என்ற சொற்றொடருக்கு கிரேக்க அகர வரிசையைப் பயன்படுத்தி இதேபோன்ற விளையாட்டு ஒன்று விளையாடப்பட்டது. [26]கிரேக்க மொழியில், இந்தச் சொற்றொடர், *e Latine Basileia* என்று இருக்கும், முதல் இரண்டு "e"க்கள், ஒவ்வொன்றும் 8 என்ற மதிப்பைக் கொண்ட "eta" வாக உள்ளன, அதே வேளையில் கடைசி "e" யானது 5 என்ற மதிப்பைக் கொண்ட ஒரு "epsilon" ஆக உள்ளது. [27]இதே விளையாட்டை, இத்தாலிய சபை என்று அர்த்தம் கொண்ட *ekklesia Italika* என்ற வார்த்தைகளீ கொண்டும் விளையாட முடியும். இதை நீங்கள் கூட்டிப் பார்க்க விரும்பினால், "lambda" வுக்குப் பின்னால் வரும் "e" யானது எட்டு என்ற மதிப்பைக் கொண்ட "eta" இருக்கையில், மற்ற "e"க்கள் ஒவ்வொன்றும் 5 என்ற மதிப்பைக் கொண்ட "epsilon" ஆக உள்ளன என்பதை நீங்கள் அறிய வேண்டியது அவசியமாக உள்ளது. [28]See *A Debate on the Roman Catholic Religion* (Nashville: McQuiddy Printing Co., 1914), 287-88. [29]"தேவனுடைய கோபம்" (*orge theou*) என்ற சொற்றொடர் 666 என்ற கூட்டுத் தொகையைத் தருகிறது என்று யாரோ ஒருவர் கண்டறிந்துள்ளார். இன்னொருவர், *arnoume* என்ற சொற்றொடர் 666 என்ற கூட்டுத் தொகையைத் தருகிறது என்று கூறவந்தார். இது "நான் மறுக்கின்றேன்" என்பதற்கான கிரேக்க வார்த்தையின் வடிவமாய் இருந்திருக்கும், இவ்விதமாக இது கிறிஸ்துவின் நாமத்தை

மறுப்பதைக் குறித்து நின்றிருக்கும் என்பது இதைத் தோற்றுவித்தவரின் கருத்தாயிருக்கும். [30]கத்தோலிக்கர்களும் இந்த விளையாட்டை விளையாடியுள்ளனர்.

[31]இவற்றில் பெரும்பான்மையானவை சாத்தியமற்றவை என்பது தெளிவாயிருக்க வேண்டும். *"666"* என்பது குறிப்பிட்ட ஒரு நபரைக் குறித்து நிற்கவில்லை என்றால், அது யோவானின் வாசகர்களுக்கு, பொதுவான காலகட்டத்தில் யாரேனும் ஒருவரைக் குறித்து நின்றிருக்கச் சாத்தியக்கூறு உள்ளது. [32]William Hendriksen, *More Than Conquerors* (Grand Rapids, Mich.: Baker Book House, 1954), 273. [33]Alan Johnson, *Revelation*, The Expositor's Bible Commentary, gen. ed. Frank E. Gaebelein (Grand Rapids, Mich.: Regency Reference Library, Zondervan Publishing House, 1981), 12:534. [34]Smith, 2162. [35]Albert H. Baldinger, *Preaching From Revelation: Timely Messages for Troubled Hearts* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1960), 74. [36]Mulholland, 239. [37]Baldinger, 75. [38]Homer Hailey, *Revelation: An Introduction and Commentary* (Grand Rapids, Mich.: Baker Book House, 1979), 299.

---

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. *"666"*ஐப் பற்றி நீங்கள் வினோதமான கருத்துக்கள் எதையாவது கேள்விப்பட்டிருக்கின்றீர்களா?
2. இந்தப் பாடத்தின் முதற்பகுதியில் குறிப்பிடப்பட்ட "வழக்கத்திற்கு மாறான" அணுகுமுறைகள் பற்றியும் அவை ஒவ்வொன்றுடனும் தொடர்புடைய பிரச்சினைகள் சிலவற்றைப் பற்றியும் கலந்துரையாடவும்.
3. யோவானின் நாட்களில் மக்கள் எழுத்துக்களுக்கு எண்கள் நியமித்திருந்தது ஏன்?
4. A = 1, B = 2, C = 3, இன்னும் இதைப்போன்று [ஆங்கில எழுத்துகளுக்கு] எண்களைப் பயன்படுத்தி, உங்கள் பெயரை எண்ணாகத் திருப்புங்கள். உங்கள் எண்ணை வகுப்பில் உள்ள மற்றவர்களின் எண்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள். உங்களுடையதைப் போலவே வகுப்பில் பிற பெயர் எண்கள் ஏதேனும் உள்ளனவா?
5. ஒரு பெயரை எண்ணாக மாற்றுவது எளிது என்று இந்தப் பாடம் ஆலோசனை தெரிவிக்கிறது. ஆனால் ஒரு எண்ணை, நாம் நோக்கம் கொண்டுள்ள பெயராக மாற்றுதல் என்பது கடினமாகும். இவ்விஷயம் என் இப்படியிருக்கிறது?
6. "யோவானின் புதிர்" என்று பலர் கருதும் விஷயத்திற்கு மிகப் பிரபலமான தீர்வாக இருப்பது எது?
7. இங்கு கருத்தாகத் தெரிவிக்கப்பட்டுள்ள பிற தீர்வுகள் யாவை?
8. கூட்டிப்பார்த்தால் 666 வருவதுபோல் வேறு ஏதேனும் பெயர்கள், வார்த்தைகள், பட்டப்பெயர்கள் அல்லது இவற்றின் இணைவுகளை உங்களால் குறிப்பிட முடியுமா? (பிராங்க் பேக் அவர்களின் நான்கு

*"விதிகளை" நினைவில் வைத்துக்கொள்ளவும்.)*

9. *"ஆறு" என்பதன் அடையாளத்துவ அர்த்தம் என்ன? இந்த எண் மூன்று முறைகள் திரும்பத் திரும்ப கூறப்பட்டிருப்பதன் முக்கியத்துவம் என்ன?*
10. *''666''ஐ அடையாளத்துவமாக விளக்கியுரைப்பதில், முதல் நூற்றாண்டில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு என்ன செய்தி இருந்தது? இன்றைய நாட்களில் நமக்கு என்ன செய்தி இருக்கிறது?*